**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.220/2023

Deposition of D.W.1

Name of the Witness: **ராஜேந்திரன்**

Date : 12.03.2025

***குறுக்கு விசாரணை** தொடர்ச்சி*

10. தாவா சொத்துக்கள் நான் சம்பாதித்த சொத்துக்களா என்றால் நானும் என் அப்பாவும் சேர்ந்து சம்பாதித்த சொத்துக்களாகும். என் அக்கா மூதாதையர் சொத்துக்கள் என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாவில் உள்ள விவரங்களை தெரிந்துக்கொள்ள தற்போது வரை நான் முயற்சி செய்யவில்லை.

கேள்வி இந்த வழக்கில் நான் வழக்கறிஞரை வைத்து பதில் போட்டுள்ளீர்கள்

பதில்– ஆமாம் பதில் போட்டுள்ளேன்.

கேள்வி– வாதிக்கு இந்த சொத்தில் பாகம் உள்ளதை ஒத்துக்கொண்டுள்ளீர்களா

பதில்– இல்லை என் அக்காவிற்கு வேறு சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி– வாதிக்கு ஏன் சொத்துக்களில் பாகம் இல்லை என்று சொல்கிறீர்கள்

பதில்– வாதிக்கு பாகம் இல்லை வேறு சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. என் அப்பாவும் அம்மாவும் வாதிக்கு வேறு சொத்துக்கள் கொடுத்துள்ளார்கள். என் அப்பா வாதிக்கு தான செட்டில்மென்ட் மூலமாகவும் என் அம்மா கிரைய பத்திரம் மூலமாகவும் வாதிக்கு சொத்துக்களை கொடுத்துவிட்டார்கள்.

கேள்வி– என் அம்மா சொத்தை கிரையம் செய்ததாக முடிவு எடுத்து விற்பனை செய்ய தயார் செய்தபோது வாதியை அந்த சொாத்தை வாங்கி கொண்டார் என்றால்

பதில் – இல்லை என் அம்மா வாதிக்கு கொடுத்துவிட்டார். என் அப்பா சொத்தை விற்கும் போது தான் வாதி சொத்தை கிரையமாக வாங்கிகொண்டார். வாதிக்கு என் அம்மா கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்ததார்கள் அன்றே என் அப்பா வாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். என் அப்பா வாதிக்கு ஒரே தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். வேறு சொத்துக்கள் தொடர்பாக தான செட்டில்மென்ட் பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை.

கேள்வி– அந்த தான செட்டில்மென்ட் வாதிக்கு எழுதிக்கொடுத்தது வாதிக்கு தெரியாது என்றும் என் அப்பா ரத்து செய்துவிட்டார்.

பதில்– செட்டில்மென்ட் ரத்து செய்தது பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ 6 பத்திரம் 01.10.2003 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். 07.07.2005 அன்று என் அப்பா அந்த தான செட்டில்மென்ட் ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. தான செட்டில்மென்ட், எழுதப்பட்டது பற்றியும் அது ரத்தானது பற்றியும் வாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல.

என் பெயருக்கு என் அப்பா எழுதிக்கொடுத்த இரண்டு தான செட்டில்மென்ட் பத்திரம் மூலமாக நான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் ஆமாம். இதை தவிர மகன் பெயருக்கு என் அப்பா எழுதிக்கொடுத்த உயில் அடிப்படையில் நான் உரிமை கோருகிறேன். இரண்டு தான செட்டில்மென்ட் பத்திரங்களும் ஒரே நாளில் எழுதப்படவில்லை. இரண்டு ஆவணங்களுக்கு இடையே எவ்வளவு காலம் இடைவெளி இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் அப்பா என் பெயருக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ 4 ஐ 13.04.2009 ல் ரத்து செய்துவிட்டார் என்றாலும், அது சம்மந்தமான ரத்து விவரங்கள் நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ 4லே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பிறகு தான் என் மகன் இறந்தார். என் அப்பா என் மகன் எந்த வருடம் இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் என் அப்பா என் மகனுக்கு முன்பாக இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும். என் அப்பா இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக என் மகன் பெயருக்கு உயில் எழுதி உள்ளதாக என்னிடம் கொடுத்தார். அந்த உயிலின் பேரில் உரிமை பெறுவதற்கு சட்ட நடைமுறை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் உயிருடன் இருக்கும்வரை உயில் நடைமுறைக்கு வருமா, வராதா என்ற விவரம் எனக்கு தெரியாது. உயிலில் உள்ள சொத்திற்கு கணினி சிட்டா என் பெயரில் உள்ளது. என் பெயருக்கு மாறுவதற்கு முன்பாக என் அப்பாவின் பெயரில் இருந்தது. கிராம நிர்வாக அலுவலரிடம் பி.வா.சா.ஆ 5 உயிலை கொடுத்து என் பெயரில் சிட்டாவை மாற்றிக்கொண்டேன். அப்போது என் மகன் உயிருடன் இருந்தார். என் மகன் இறந்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. ராஜேந்திரன் த/பெ சித்தன் தன்டுகாரம் பட்டி, பாளையம்புதூர், தருமபுரி –636807 என்ற விவரம் என்னுடையது தான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் இண்டூர் காவல் நிலையத்தினர் குற்ற எண். 25/2014 நாள் 15.02.2014 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா, என் மகன் இறந்தற்கு எங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் பதிவு இருக்கும் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 3 என் பெயரில் உள்ள தான செட்டில்மென்ட் பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் அது என் அக்கா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அதே தேதியில் என் அக்கா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அக்கா பெயரில் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது போலியாக கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அக்காவுடன் வேறு யாரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் அப்பாவையும், என் அக்காவை ஏமாற்றி தான செட்டில்மென்ட் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா என் மகன் பெயரில் எழுதிவைத்து பி.வ.சா.ஆ 5 உயிலை 10.04.2007 ல் இருத்து செய்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பா எழுதிவைத்த உயில் என் அப்பா இரத்து செய்துவிட்டதாலும், என் அப்பாவிற்கு முன்பாகவே என் மகன் இறந்துவிட்டதால் அது நடைமுறைக்கு வராது என்றால் சரியல்ல. அதனால் நான் என் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளது போது எந்த உயிலும் எனக்கு வராது என்று சொன்னால் சரியல்ல. என் அக்காவிற்கு எழுதிக்கொடுத்த பி.வாசா.ஆ 8 கிரையபத்திரத்தில் நான் என் அப்பா, என் மகன், மகளுக்கா நான் கார்டியனாக கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். என் அக்காவிற்கு கிரையம் செய்துக்கொடுத்த சொத்து மூதாதையர் சொத்து என்பதால் தான் நாங்கள் எல்லோரும் சொத்தின் உரிமையாளராக காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பி.வாசா.ஆ7 மூலமாக வாதி என் அம்மாவிடம் பணம் கொடுத்து தான் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் தரப்பில்தாக்கல் செய்யப்பட்ட ஆவணப்பட்டியலில் பி.வாசா.ஆ7 கிரைய பத்திரத்தை

தான செட்டில்மென்ட் பத்திரம் என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் என் அப்பா எழுதிக்கொடுத்த தான செட்டில்மென்ட் மற்றும் உயிலின் அடிப்படையில் தான் என் மகள் பெயருக்கு செட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் மோசடியானது என்பதாலும் உயில் நடைமுறைக்கு வராததாலும் அதன் அடிப்படையில் நான் எனது மகளுக்கு செய்து கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரம் ( Ex.B10) சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தை 22.03.2010 ல் ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சியிடம் அந்த ஆவணத்தை காட்டியபோது தனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது என்று சொல்கிறார். என் அப்பா என் மகனுக்கு எழுதிக்கொடுத்த உயிலை 10.04.2007 ல் ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சியிடம் அந்த ஆவணத்தை காட்டியபோது தனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது என்று சொல்கிறார். என் அப்பா வாதி பெயரில் எழுதிக்கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தை 07.07.2005 ல் ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சியிடம் அந்த ஆவணத்தை காட்டியபோது தனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது என்று சொல்கிறார். என் அப்பா உயிருடன் இருக்கும்போதே என் மகன் இறந்துவிட்டார் என்பதற்கு இண்டுர் காவல் நிலைய புகார், முதல் தகவல் அறிக்கை, இறப்பு சான்றிதழ், என் மகனின் சடலகூறு ஆய்வு அறிக்கை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பாவின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை எல்லாமே கூட்டுகுடும்ப சொத்துக்களில் இருந்து அவரது பெயரிலே வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. இதுவரை தாவா சொத்துகள் பாகமே ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உரிமை கோரும் இரண்டு தான செட்டில்மென்ட் பத்திரத்தில் ஒன்று மோசடியானது, ஒன்று தவறானது என்று சொன்னால் சரியல்ல. உயில் மூலமாக சொத்துக்களில் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளமுடியாது

பொய்யானது என்று சொன்னால்சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.